# குறுகியகால, இணையவழிப் படிப்புகள்
# Short, online courses

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ‘உயர் கல்வி நிவரணத் திட்டம்’ (Higher Education Relief Package) ‘கோவிட்-19’-இனால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறுகியகால, இணையவழிப் படிப்புகளை உள்ளடக்கியிருக்கிறது.

செவிலியர் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, சுகாதாரம், ‘தகவல் தொழில்நுட்பம்’ (IT) மற்றும் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் படிப்புகள் கிடைக்கும். படிப்பிற்கான கட்டணங்கள் மாணவ-மானவியருக்காக வெகுவாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன, மற்றும் தகுதி பெறுவோர் ‘HECS-HELP’ மூலமாகக் கட்டணச் செலுத்தல்களைத் தள்ளி வைத்துக்கொள்ளலாம்.

இந்தப் படிப்புகள் ஆறு மாத காலம் வரை நீடிக்கும், மற்றும் ‘கோவிட்-19’-இற்குப் பிறகு வரும் பொருளாதாரத்திற்கான புதிய திறன்களை வளர்த்துக்கொள்ளத் தொழிலாளர்களுக்கு இவை உதவும். குறுகியகாலப் படிப்புகள் மற்றும் அவற்றிற்கான தள்ளுபடி செயப்பட்டக் கட்டணங்கள் ஆகியவற்றின் அட்டவணை ஒன்றைப் பெற www.CourseSeeker.edu.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள், அல்லது மேலதிகத் தகவல்களுக்காக CourseSeeker வலைத்தளத்திலுள்ள Resources page - ஐப் பாரு . கள்